நயர்சன் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் மன்றம்
RYERSON TAMIL STUDENT ASSOCIATION
*55 Gould St. Room B22 - Toronto, On - M5B 1E9 – Canada – www.ryetsa.com*

**பொங்கியெழுந்து புதுப்பரணி படைக்க புறப்படுங்கள்**

எதிர்வரும் 30ம் நாள் யாழில் நடைபெறவுள்ள "பொங்குதமிழ் 2005" எனும் எழுச்சி நிகழ்வுக்காக தங்களை தயார்ப்படுத்திக் கொண்டிருக்கும் எம் தமிழீழ மக்களே!

யாழ் பல்கலைக்கழக சமூகத்தால் தமிழர் தரப்பு அபிலாசைகளை, உரிமைகளை நியாயங்களை வெளிக்கொண்டு வருவதற்காக ஆரம்பிக்கப்பட்ட பொங்குதமிழ் இன்று கடல் கடந்து, கண்டங்கள் கடந்து தமிழ்மக்களால் உணர்வு பூர்வமாக மேற்கொண்டு வருவது யாவரும் அறிந்ததே.

மீண்டும் எமது அபிலாசைகளை, உரிமைகளை நியாயங்களை உலகின் காதுகளுக்கு உரக்க சொல்ல வேண்டிய நிலைக்கு சிங்கள பேரினவாதம் எம்மை தள்ளிவிட்டுள்ளது. 2002 மாசி 22ம் திகதி கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை கேள்விக்குறியாகியுள்ளது. விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரவரைபு பற்றி பேசுவதற்கு சிங்களதேசம் தயாராக இல்லை. ஏன்? ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட எம் மக்களின் அனர்த்த நிவாரண கட்டமைப்பிற்கு சிங்களதேச நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இந்நிலையில் வாய் மூடி மௌனிகளாக நாம் இருந்து கொண்டிருக்க இனவெறி சிங்கள இராணுவம் எம் மக்கள் மீதும், இராணுவ திறந்த வெளிச்சிறைச்சாலையில் உள்ள மக்களுக்காக பணிபுரிய வந்துள்ள எமது போராளிகள் மீதும் திட்டமிட்ட முறையில் தாக்குதல்களை மேற்கொண்டு யுத்தநிறுத்தத்தை கேள்விக்குறியாக்குதுடன் யுத்த சூழ்நிலைகளை உருவாக்கி வருகின்றது.

இந்நிலையில் நாம் சிங்கள பேரினவாதத்திடம் பட்டறிந்து கொண்ட விடயத்தை அதாவது சிங்களதேசம் எமக்கு ஒருபோதும் எந்த ஒரு தீர்வையும் தரபோவதில்லை என்பதை சர்வதேசத்திற்கு உணர்த்தவேண்டிய கட்டாய சூழ்நிலையில் நாம் உள்ளோம். அந்த வகையில் தமிழர் எழுச்சி மகாநாட்டில் பிரதான ஒரு பகுதியாக நடைபெறவுள்ள இந்த பொங்குதமிழ் எழுச்சி விழாவில் எம்மினிய உறவுகள் யாவரும் ஓரே அணியில் அலை அலையாக திரண்டு சர்வதேசத்தை எமக்குரிய ஓரே தீர்வாகிய "தமிழர் அரசுப்பிரகடனத்தை" அங்கீகரிக்கவேண்டும் என கோரிக்கை விடவேண்டும் என உங்களை வேண்டிநிற்பதோடு, எந்த வகை நெருக்குதல்கள் வந்தாலும் சளைக்காது எல்லோரும் ஒருமித்து கைகோத்து பொங்குதமிழ் எழுச்சியை கடந்த ஆண்டைவிடவும் மிகவும் எழச்சி மிக்கதாக அமைப்பீர்கள், அமைக்க பாடுபடுவீர்கள் என்ற நம்பிக்கை உங்கள் உறவுகளாகிய எமக்கு உண்டு என்பதனை பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்வதோடு, நீங்கள் நடாத்திக்காட்டப்போகின்ற இந்த பொங்குதமிழ் 2005 வெற்றி நிகழ்வு நாளைய எமது தேசத்தை நிறுவுவதற்கான சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுத்தரும் என்ற பெருநம்பிக்கையோடு எங்கள், உங்கள் தமிழர் அரசுப்பிரகடனம் வெற்றி பெற வாழ்த்துவதுடன் அதற்காக என்றும் உங்களோடு கைகோத்து நிற்போம் எனவும் உறுதிபட கூறுகின்றோம்.

**உங்கள் தொப்புள் கொடி உறவுகள்**

பிரசன்னா மகாலிங்கம்
தலைவர், நயர்சன் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் மன்றம்